**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்புநீதிபதி, சத்தியமங்கலம்**

2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03-ம் நாள் வியாழக்கிழமை
(2053 திருவள்ளுவராண்டு ஶ்ரீ சுபகிருதுவருடம் ஐப்பசித்திங்கள் 17-ம் நாள்)

**I.A.No.3/2022**
**in**
**O.S.212/2018**

தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, (TMB)
சத்தியமங்கலம் கிளை சார்பாக
கிளை மேலாளர்,
சத்தியமங்கலம். ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1.கௌதம்
2.சம்பத்குமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 17.10.2022 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.R.அண்ணாமலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இந்த மனுவானது, முதன்மை சாட்சிய பிராமணப்பத்திரிக்கையை ஏற்றுக்கொண்டு ஏற்கனவே மேற்படி வழக்கில் கடந்த 01.03.2020-ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை "Strike off" செய்து கொள்ள மனுதாரருக்கு அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி, பிரிவு 151 சிபிசி-ன் படி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:-

இந்த மனுவானது, இந்நிலையில் மேற்படி வழக்கில் கடந்த 01.03.2020-ம் தேதியில் முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 08.03.2020-ம் தேதியிலிருந்து இன்றைய தேதி வரை வாய்தா போடப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருக்கும் நிலையில் முன்னால் கிளை மேலாளர் தற்பொழுது வேறு கிளைக்கு மாறுதலாகி வேறு ஊருக்கு சென்றுவிட்டபடியால் மேற்படி வழக்கில் அவரால் குறுக்கு சாட்சியம் அளிக்க ஏதுவான சூழ்நிலை இல்லாததால் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை "Strike off" செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும் மேற்படி முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை திரும்ப பெற்றுக் கொள்ளாமல் மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தினால் மனுதாரர்களுக்கு நியாயமான, முறையான தீர்ப்பு கிடைக்க ஏதுவாக இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை "Strike off" செய்து கொள்வதால் பிரதிவாதிக்கு எந்தவித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:-

எதிருரையில், மனு பொய்யானது என்றும், மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை இந்த மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். பாரா 3-ல் சொல்லியுள்ள சங்கதியான முன்னால் கிளைமேலாளரால் Pw1 பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பது உண்மை மற்ற சங்கதிகள் பொய்யானது. முன்னால் கிளை

மேலாளரனின் சத்திய பிரமாண வாக்குமூலம் தவிர்க்கப்பட வேண்டும் (eschewed) என்றும், மனுதாரர் தற்போதைய கிளை மேலாளரால் முதன்மை விசாரணை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். தவிர்க்கப்பட்டது (eschewed) என்ற வார்த்தையின் பொருள் ஒரு செயலை ஒரு காரியத்தை செய்வதிலிருந்து வேண்டுமென்றே தவிர்ப்பது அல்லது தவிர்ப்பது ஆகும். மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலமானது இந்த வழக்கின் ஆவணங்களில் ஒரு பகுதியாக இருக்கும் எனவே, அதை இந்த மனுதராரின் வேண்டுகோளின் பேரில் இந்த வழக்கு கோப்புகளிலிருந்து நீக்கரவு செய்ய இயலாது. மனுதாரர் இந்த மனுவை முன்னால் கிளை மேலாளரின் பிரமாண அறிக்கையை தவிர்க்க (Await) வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். முன் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணபத்திரம் நடைமுறையில் இருக்கும் வரை புதிய பிரமாணவாக்குமூலத்தை இந்நீதிமன்றம் பெற இயலாது. புதிய பிரமாணவாக்குமூலத்தை பெற்றால், இந்த வழக்கில் பிரிவு 11-ன் உரிமையியல் நடைமுறைச்சட்டம் RES-JUDICATA-னால் பாதிக்கப்படும். எனவே ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தை வழக்கு கோப்புகளிலிருந்து அகற்றப்படமால், புதிய பிரமாணவாக்குமூலத்தை இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

4. **தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. தீர்வு:-

6.1. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், இந்நிலையில் மேற்படி வழக்கில் கடந்த 01.03.2020-ம் தேதியில் முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 08.03.2020-ம் தேதியிலிருந்து இன்றைய தேதி வரை வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருக்கும் நிலையில் முன்னால் கிளை மேலாளர் தற்பொழுது வேறு கிளைக்கு மாறுதலாகி வேறு ஊருக்கு சென்றுவிட்டபடியால் மேற்படி வழக்கில் அவரால் குறுக்கு சாட்சியம் அளிக்க ஏதுவான சூழ்நிலை இல்லாததால் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை "Strike off" செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மேலும் மேற்படி முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை திரும்ப பெற்றுக் கொள்ளாமல் மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தினால் மனுதாரர்களுக்கு நியாயமான, முறையான தீர்ப்பு கிடைக்க ஏதுவாக இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையை "Strike off" செய்து கொள்வதால் பிரதிவாதிக்கு எந்தவித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும் வாதிட்டார்.

6.3. எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், முன்னால் கிளை மேலாளரனின் சத்திய பிரமாண வாக்குமூலம் தவிர்க்கப்பட வேண்டும் (eschewed) என்றும், மனுதாரர் தற்போதைய கிளை மேலாளரால் முதன்மை விசாரணை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் என்றும், தவிர்க்கப்பட்டது (eschewed) என்ற வார்த்தையின் பொருள் ஒரு செயலை ஒரு காரியத்தை செய்வதிலிருந்து வேண்டுமென்றே தவிர்ப்பது அல்லது தவிர்ப்பது ஆகும் என்றும், மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலமானது இந்த வழக்கின் ஆவணங்களில் ஒரு பகுதியாக இருக்கும் எனவே, அதை இந்த மனுதாரரின் வேண்டுகோளின் பேரில் இந்த வழக்கு

கோப்புகளிலிருந்து நீக்கரவு செய்ய இயலாது என்றும், மனுதாரர் இந்த மனுவை முன்னால் கிளை மேலாளரின் பிரமாண அறிக்கையை தவிர்க்க (Await) வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், முன் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணபத்திரம் நடைமுறையில் இருக்கும் வரை புதிய பிரமாணவாக்குமூலத்தை இந்நீதிமன்றம் பெற இயலாது என்றும், புதிய பிரமாணவாக்குமூலத்தை பெற்றால், இந்த வழக்கில் பிரிவு 11-ன் உரிமையியல் நடைமுறைச்சட்டம் RES-JUDICATA-னால் பாதிக்கப்படும் என்றும், எனவே ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தை வழக்கு கோப்புகளிலிருந்து அகற்றப்படமால், புதிய பிரமாணவாக்குமூலத்தை இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், எனவே இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

6.4. மேற்படி அசல் வழக்கானது, மனுதாரர் வங்கியால், எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகையை வட்டியுடன் தாவா தொகை வசூலிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் வங்கியின் அப்போதைய கிளை மேலாளர் வா.சா.1 ஆக 01.03.2021-ல் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 08.03.2021-ல் வாய்தா போடப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்ட நிலையில், விசாரிக்கப்பட்ட கிளை மேலாளர் வேறு கிளைக்கு மாறுதலாகி சென்றுவிட்டபடியால், மேற்படி வழக்கில் அவரால் குறுக்கு விசாரணை அளிக்க இயலவில்லை என்றும், எனவே 01.03.2021-ல் விசாரிக்கப்பட்ட கிளை மேலாளரின் பிரமாணவாக்குமூலத்தை "Strike off" செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6.5. கிளை மேலாளர் வேறு வங்கிக்கு மாறுதல் ஆகிவிட்ட நிலையில், மனுதாரர் தரப்பில் அவரே குறுக்கு விசாரணை செய்ய இயலாது சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், எனவே தற்போதைய கிளை மேலாளரை வைத்து புதிய பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்து

மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரணையாக செய்ய வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளதக்கது. ஏற்கனவே விசாரிக்கப்பட்ட கிளை மேலாளரின் பிரமாணவாக்குமூலம் இந்த வழக்கின் கோப்புகளில் இருப்பதனால், எதிர்மனுதாரர் தரப்பு வழக்கிற்கோ அல்லது இந்த வழக்கு விசாரணைக்கோ, தீர்விற்க்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.6. மேலும் எதிர்மனுதாரர் தரப்பு வாதமான புதிய பிரமாணவாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வதினால் இந்த வழக்கு பிரிவு 11-ன் உரிமையியல் நடைமுறைச்சட்டத்தினால் பாதிக்கப்படும் என்பது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. ஏனெனில் மனுதாரர் தரப்பு வழக்கினை நிரூபிக்க வங்கி தற்போதை கிளை மேலாளரை வைத்து வழக்கினை மேற்கொண்டு நடத்துவது எந்த விதத்திலும், வழக்கினை பாதிக்காது. எனவே இந்த மனுவை அனுமதிப்பதற்கு மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட மேற்கண்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளதக்கது என்பதால் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும்  எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.